ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2203/7 - 2020 නොවැම්බර් මස 23 වැනි සඳුදා - 2020.11.23

*2203/7 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 23 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ.-பி. 15/ 2016*

**(357 ஆம் அத்தியாயமான) தரைப்படைச் சட்டம்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பினது 4 ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் (357 ஆம் அத்தியாயமான) தரைப்படைச் சட்டத்தின் 29 ஆம், 155 ஆம் பிரிவுகளின் கீழ் சனாதிபதியினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**கோட்டாபய ராஜபக்ஷ,**
*சனாதிபதி.*

கொழும்பு,
*2020, நவெம்பர் 04.*

**ஒழுங்குவிதிகள்**

*காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறாக, 1989 ஆம் ஆண்டு யூன் மாதம் 15 ஆந் திகதிய 562/ 11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1981 ஆம் ஆண்டின் தரைப்படை ஓய்வூதியங்கள் மற்றும் பணிக்கொடைகள் கோவை, அதன் 29 ஆம் ஒழுங்குவிதியின் (ஐ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது :-*

"(ஒ) வேறேதேனும் ஒழுங்குவிதியில் முரணாக எது எவ்வாறிருப்பினும், 2009 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் தொண்டர் படையில் ஆணை ஒன்று வழங்கப்பட்டவரும் அத்தகைய ஆணை வழங்கப்பட்ட நேரத்தில் 23 வயதுக்கு மேற்பட்டவராகவிருந்தவரும் ஓய்வுபெறுகைக்கான வயதெல்லையை எய்தியதன்மேல் அல்லது அவருக்குத் தொடர்ந்தும் தொழில் கிடைக்கக்கூடியதாக இருக்கின்றதில்லை என்ற முடிபொன்றின் விளைவாக அல்லது அவர் ஒதுக்குப்படைக்கு இடமாற்றப்படுகின்றமை காரணமாக அவர் ஓய்வுபெற்ற நேரத்தில் இருபது (20) ஆண்டுகளைக் கொண்ட கணிதகு சேவையைப் பூர்த்திசெய்திராதவரும்

கப்பற் சிறுதிறப் பணியாளர் ஒருவர் தவிர்ந்தவருமான அலுவலரொருவருக்கு, அவர் குறைந்தபட்சம் பதினைந்து (15) ஆண்டுகளைக் கொண்ட கணிதகு சேவையைப் பூர்த்திசெய்து திருப்திகரமாகச் சேவை ஆற்றியிருப்பின், கிரமமான படையிலுள்ள அலுவலரொருவரின் விடயத்திற்போன்று ஓய்வூதியமொன்று வழங்கப்படலாம்.

(ஓ) வேறேதேனும் ஒழுங்குவிதியில் முரணாக எது எவ்வாறிருப்பினும், 2009 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் தொண்டர் படையில் கப்பற் சிறுதிறப் பணியாளர் ஒருவராக நேரடியாக ஆணை பெற்றவரும் அத்தகைய ஆணை வழங்கப்பட்ட நேரத்தில் 35 வயதுக்கு மேற்பட்டவராகவிருந்தவருமான எவரேனும் அலுவலருக்கு அல்லது 2009 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் தொண்டர் படையில் கப்பற் சிறுதிறப் பணியாளர் என்ற பதவி வரிசைக்குப் பதவியுயர்த்தப்பட்டதன் மூலம் ஆணை ஒன்று வழங்கப்பட்டவரும் அத்தகைய ஆணை வழங்கப்பட்ட நேரத்தில் 35 வயதுக்கு மேற்பட்டவராக இருந்தவரும் ஓய்வுபெறுகைக்கான வயதெல்லையை எய்தியதன்மேல் அல்லது அவருக்குத் தொடர்ந்தும் தொழில் கிடைக்கக்கூடியதாக இருக்கின்றதில்லை என்ற முடிபொன்றின் விளைவாக அல்லது அவர் ஒதுக்குப்படைக்கு இடமாற்றப்படுகின்றமை காரணமாக அவர் ஓய்வுபெற்ற நேரத்தில் இருபது (20) ஆண்டுகளைக் கொண்ட கணிதகு சேவையைப் பூர்த்திசெய்திராதவருமான எவரேனும் அலுவலருக்கு, அவர் குறைந்தபட்சம் பதினைந்து (15) ஆண்டுகளைக் கொண்ட கணிதகு சேவையைப் பூர்த்திசெய்து திருப்திகரமாகச் சேவை ஆற்றியிருப்பின், கிரமமான படையிலுள்ள கப்பற் சிறுதிறப் பணியாளர் ஒருவரின் விடயத்திற்போன்று ஓய்வூதியமொன்று வழங்கப்படலாம்.

(ஔ) வேறேதேனும் ஒழுங்குவிதியில் முரணாக எது எவ்வாறிருப்பினும், அரசாங்கத்தின் ஏதேனும் அமைச்சில், திணைக்களத்தில் அல்லது வேறேதேனும் நிறுவனத்தில் ஓய்வூதியம் பெறுதகு சேவையொன்றில் தொழிலுக்கமர்த்தப்பட்டிருக்கையில் 2009 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் தொண்டர் படையில் அலுவலரொருவராகச் சேர்க்கப்பட்ட எவரேனுமாள், அத்தகைய தொண்டர் படைச் சேவையிலிருந்து முறையாக விடுவிக்கப்பட்டதன் மேல் அல்லது அத்தகைய தொண்டர் படைச் சேவையிலிருந்து முறையாக ஓய்வுபெறுவதன் மீது ஒன்றில் அரசாங்க சேவை தொடர்பில் அல்லது தொண்டர் படைச் சேவை தொடர்பில் ஓய்வூதியமொன்றுக்குத் தகவுடையவராக இராதிருக்குமிடத்து, அவர் அத்தகைய தொண்டர் படையில் குறைந்தபட்சம் பத்து (10) ஆண்டுகளைக் கொண்ட கணிதகு சேவையைப் பூர்த்திசெய்து திருப்திகரமாகச் சேவை ஆற்றியிருப்பின் மற்றும் அரசாங்கத்திலும் அத்தகைய தொண்டர் படையிலும் அவரது சேவையைக் கவனத்துக்கெடுக்கும்போது இருபது (20) ஆண்டுகளுக்குக் குறையாத கூட்டுமொத்தச் சேவையை அவர் கொண்டிருப்பின், 4 ஆம் ஒழுங்குவிதியில் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் கணக்கிடப்பட்ட ஓய்வூதியமொன்று அவருக்கு வழங்கப்படலாம்.

(க) வேறேதேனும் ஒழுங்குவிதியில் முரணாக எது எவ்வாறிருப்பினும், 2009 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் தரைப்படை வீரரொருவராகத் தொண்டர் படைக்கு ஆட்சேர்க்கப்பட்டிருந்தவரும் அவ்வாறு ஆட்சேர்க்கப்பட்ட நேரத்தில் 33 வயதுக்கு மேற்பட்டவராக இருந்தவரும் கட்டாய ஓய்வுபெறும் வயதை அடைந்ததன்மேல் அல்லது அவருக்குத் தொடர்ந்தும் தொழில் கிடைக்கக்கூடியதாக இருக்கின்றதில்லை என்ற முடிபொன்றின் விளைவாக அல்லது அவர் ஒதுக்குப் படைக்கு இடமாற்றப்படுகின்றமை காரணமாக அவர் ஓய்வுபெற்ற நேரத்தில் இருபத்திரண்டு (22) ஆண்டுகளைக் கொண்ட கணிதகு சேவையைப் பூர்த்திசெய்திராதவருமான எவரேனும் ஆளுக்கு, அவர் குறைந்தபட்சம் பதினைந்து (15) ஆண்டுகளைக் கொண்ட கணிதகு சேவையைப் பூர்த்திசெய்து திருப்திகரமாகச் சேவை ஆற்றியிருப்பின் கிரமமான படையிலுள்ள தரைப்படை வீரரொருவரின் விடயத்திற்போன்று ஓய்வூதியமொன்று வழங்கப்படலாம்.

(ங) வேறேதேனும் ஒழுங்குவிதியில் முரணாக எது எவ்வாறிருப்பினும், அரசாங்கத்தின் ஏதேனும் அமைச்சில், திணைக்களத்தில் அல்லது வேறேதேனும் நிறுவனத்தில் ஓய்வூதியம் பெறுதகு சேவையொன்றில் தொழிலுக்கமர்த்தப்பட்டிருக்கையில் 2009 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் தரைப்படை வீரரொருவராகத் தொண்டர் படைக்கு ஆட்சேர்க்கப்பட்ட எவரேனுமாள், அத்தகைய தொண்டர் படைச் சேவையிலிருந்து முறையாக விடுவிக்கப்பட்டதன் மேல் அல்லது அத்தகைய தொண்டர் படைச் சேவையிலிருந்து முறையாக ஓய்வுபெறுவதன் மீது ஒன்றில் அரசாங்க சேவை தொடர்பில் அல்லது தொண்டர் படைச் சேவை தொடர்பில் ஓய்வூதியமொன்றுக்குத் தகவுடையவராக இராதிருக்குமிடத்து, அவர் தொண்டர் படையில் குறைந்தபட்சம் பன்னிரண்டு (12) ஆண்டுகளைக் கொண்ட கணிதகு சேவையைப் பூர்த்திசெய்து திருப்திகரமாகச் சேவை ஆற்றியிருப்பின் மற்றும் அரசாங்கத்திலும் அத்தகைய தொண்டர் படையிலும் அவரது சேவையைக் கவனத்துக்கெடுக்கும்போது இருபத்திரண்டு (22) ஆண்டுகளுக்குக் குறையாத கூட்டுமொத்தச் சேவையை அவர் கொண்டிருப்பின், 21 ஆம் ஒழுங்குவிதியில் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் கணக்கிடப்பட்ட ஓய்வூதியமொன்று அவருக்கு வழங்கப்படலாம்.”.

*ச. வ.- பி. 16/2016*

## *(358 ஆம் அத்தியாயமான) கடற்படைச் சட்டம்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பினது 4 ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் (358 ஆம் அத்தியாயமான) கடற்படைச் சட்டத்தின் 161 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**கோட்டாபய ராஜபக்ஷ,**
*சனாதிபதி.*

கொழும்பு,
*2020, நவெம்பர் 04.*

### ஒழுங்குவிதிகள்

*காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறாக, 1991 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 20 ஆந் திகதிய 654/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1981 ஆம் ஆண்டின் கடற்படை ஓய்வூதியங்கள் மற்றும் பணிக்கொடைகள் கோவை, இத்தாற் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :-*

*(1) (2007 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 31 ஆந் திகதிய 1512/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் உட்புகுத்தப்பட்டவாறான) 26 ஆம் ஒழுங்குவிதியின் (2) ஆம் பந்தியின் (ஆ) என்னும் உட்பந்தியை அதன் (ஆ) என்னும் உட்பந்தியாக மீள இலக்கமிடுவதன் மூலமும் ;*

*(2) அவற்றின் 26 ஆம் ஒழுங்குவிதியின் (2) ஆம் பந்தியின் மீள இலக்கமிடப்பட்ட (ஆ) என்னும் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பந்திகளை உட்புகுத்துவதன் மூலமும் :-*

*"(இ) வேறேதேனும் ஒழுங்குவிதியில் முரணாக எது எவ்வாறிருப்பினும், 2009 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் தொண்டர் கடற்படையில் ஆணை ஒன்று வழங்கப்பட்டவரும் அத்தகைய ஆணை வழங்கப்பட்ட நேரத்தில் 23 வயதுக்கு மேற்பட்டவராகவிருந்தவரும் ஓய்வுபெறும் வயதெல்லையை எய்தியதன்மேல் அல்லது அவருக்குத் தொடர்ந்தும் தொழில் கிடைக்கக்கூடியதாக இருக்கின்றதில்லை என்ற முடிபொன்றின் விளைவாக அல்லது அவர் ஒதுக்குப்படைக்கு இடமாற்றப்படுகின்றமை காரணமாக அவர் ஓய்வுபெற்ற நேரத்தில் இருபது (20) ஆண்டுகளைக் கொண்ட கணிதகு சேவையைப் பூர்த்திசெய்திராதவருமான அலுவலரொருவருக்கு, அவர் குறைந்தபட்சம் பதினைந்து (15) ஆண்டுகளைக் கொண்ட கணிதகு சேவையைப் பூர்த்திசெய்து திருப்திகரமாகச் சேவை ஆற்றியிருப்பின், கிரமமான கடற்படையிலுள்ள அலுவலரொருவரின் விடயத்திற்போன்று ஓய்வூதியமொன்று வழங்கப்படலாம்.*

*(ஈ) வேறேதேனும் ஒழுங்குவிதியில் முரணாக எது எவ்வாறிருப்பினும், அரசாங்கத்தின் ஏதேனும் அமைச்சில், திணைக்களத்தில் அல்லது வேறேதேனும் நிறுவனத்தில் ஓய்வூதியம் பெறுதகு சேவையொன்றில் தொழிலுக்கமர்த்தப்பட்டிருக்கையில் 2009 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் தொண்டர் கடற்படையில் அலுவலரொருவராகச் சேர்க்கப்பட்ட எவரேனும் ஆள், ஒன்றில் அரசாங்க சேவை தொடர்பில் அல்லது அத்தகைய தொண்டர் படைச் சேவையிலிருந்து முறையாக விடுவிக்கப்பட்டதன் மேல் அல்லது அத்தகைய தொண்டர் படைச் சேவையிலிருந்து முறையாக ஓய்வுபெறுவதன் மீது தொண்டர் படைச் சேவை தொடர்பில் ஓய்வூதியமொன்றுக்குத் தகவுடையவராக இராதிருக்குமிடத்து, அவர் அத்தகைய தொண்டர் படையில் குறைந்தபட்சம் பத்து (10) ஆண்டுகளைக் கொண்ட கணிதகு சேவையைப் பூர்த்திசெய்து திருப்திகரமாகச் சேவையாற்றியிருப்பின் மற்றும் அரசாங்கத்திலும் அத்தகைய தொண்டர் படையிலும் அவரது சேவையைக் கவனத்துக்கெடுக்கும் போது இருபது (20) ஆண்டுகளுக்குக் குறையாத கூட்டுமொத்தச் சேவையை அவர் கொண்டிருப்பின், 4 ஆம் ஒழுங்குவிதியில் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் கணக்கிடப்பட்ட ஓய்வூதியமொன்று அவருக்கு வழங்கப்படலாம்.*

(3) ஒழுங்குவிதி 26 இன் (3) ஆம் பந்தியின் (ஆ) என்னும் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பந்திகளை உட்புகுத்துவதன் மூலமும் :-

"(இ) வேறேதேனும் ஒழுங்குவிதியில் முரணாக எது எவ்வாறிருப்பினும், 2009 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கடற்படை வீரரொருவராகத் தொண்டர் கடற்படையில் ஆட்சேர்க்கப்பட்டவரும் அவ்வாறு ஆட்சேர்க்கப்பட்ட நேரத்தில் 33 வயதுக்கு மேற்பட்டவராக இருந்தவரும் கட்டாய ஓய்வுபெறும் வயதை அடைந்ததன்மேல் அல்லது அவருக்குத் தொடர்ந்தும் தொழில் கிடைக்கக்கூடியதாக இருக்கின்றதில்லை என்ற முடிபொன்றின் விளைவாக அல்லது அவர் ஒதுக்குப்படைக்கு இடமாற்றப்படுகின்றமை காரணமாக அவர் ஓய்வுபெற்ற நேரத்தில் இருபத்தியிரண்டு (22) ஆண்டுகளைக் கொண்ட கணிதகு சேவையைப் பூர்த்திசெய்திராதவருமான எவரேனும் ஆளுக்கு, அவர் குறைந்தபட்சம் பதினைந்து (15) ஆண்டுகளைக் கொண்ட கணிதகு சேவையைப் பூர்த்திசெய்து திருப்திகரமாகச் சேவை ஆற்றியிருப்பின், கிரமமான கடற்படையிலுள்ள கடற்படை வீரரொருவரின் விடயத்திற்போன்று ஓய்வூதியமொன்று வழங்கப்படலாம்.

(ஈ) வேறேதேனும் ஒழுங்குவிதியில் முரணாக எது எவ்வாறிருப்பினும், அரசாங்கத்தின் ஏதேனும் அமைச்சில், திணைக்களத்தில் அல்லது வேறேதேனும் நிறுவனத்தில் ஓய்வூதியம் பெறுதகு சேவையொன்றில் தொழிலுக்கமர்த்தப்பட்டிருக்கையில் 2009 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கடற்படை வீரரொருவராகத் தொண்டர் கடற்படையில் ஆட்சேர்க்கப்பட்ட எவரேனுமாள், ஒன்றில் அரசாங்க சேவை தொடர்பில் அல்லது அத்தகைய தொண்டர் படைச் சேவையிலிருந்து முறையாக விடுவிக்கப்பட்டதன் மேல் அல்லது அத்தகைய தொண்டர் படைச் சேவையிலிருந்து முறையாக ஓய்வுபெறுவதன் மீது தொண்டர் படைச் சேவை தொடர்பில் ஓய்வூதியமொன்றுக்குத் தகவுடையவராக இராதிருக்குமிடத்து, அவர் தொண்டர் படையில் குறைந்தபட்சம் பன்னிரண்டு (12) ஆண்டுகளைக் கொண்ட கணிதகு சேவையைப் பூர்த்திசெய்து திருப்திகரமாகச் சேவை ஆற்றியிருப்பின் மற்றும் அரசாங்கத்திலும் அத்தகைய தொண்டர் படையிலும் அவரது சேவையைக் கவனத்துக்கெடுக்கும்போது இருபத்திரண்டு (22) ஆண்டுகளுக்குக் குறையாத கூட்டுமொத்தச் சேவையை அவர் கொண்டிருப்பின், 18 ஆம் ஒழுங்குவிதியில் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் கணக்கிடப்பட்ட ஓய்வூதியமொன்று அவருக்கு வழங்கப்படலாம்.".

12-25

---

ச.வ.-பி. 17/2016

**(359 ஆம் அத்தியாயமான) வான்படைச் சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பினது 4 ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் (359 ஆம் அத்தியாயமான) வான்படைச் சட்டத்தின் 29 ஆம், 155 ஆம் பிரிவுகளின்கீழ் சனாதிபதியினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

**கோட்டாபய ராஜபக்ஷ,**
சனாதிபதி.

கொழும்பு,
2020, நவெம்பர் 04.

**ஒழுங்குவிதிகள்**

காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டவாறாக 1991 ஆம் ஆண்டு சனவரி மாதம் 16 ஆந் திகதிய 645/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1981 ஆம் ஆண்டின் வான்படை ஓய்வூதியங்கள் மற்றும் பணிக்கொடைகள் கோவை, அதன் 34 ஆம் ஒழுங்குவிதியின் (ஏ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது:-

"(ஏ) வேறேதேனும் ஒழுங்குவிதியில் முரணாக எது எவ்வாறிருப்பினும், 2009, மே 19 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் தொண்டர் படையில் ஆணை ஒன்று வழங்கப்பட்டவரும் அத்தகைய ஆணை வழங்கப்பட்ட நேரத்தில் 23 வயதுக்கு மேற்பட்டவராகவிருந்தவரும் ஓய்வுபெறுகைக்கான வயதெல்லையை எய்தியதன்மேல்

அல்லது அவருக்குத் தொடர்ந்தும் தொழில் கிடைக்கக்கூடியதாக இருக்கின்றதில்லை என்ற முடிபொன்றின் விளைவாக அல்லது அவர் ஒதுக்குப்படைக்கு இடமாற்றப்படுகின்றமை காரணமாக அவர் ஓய்வுபெற்ற நேரத்தில் இருபது (20) ஆண்டுகளைக் கொண்ட கணிதகு சேவையைப் பூர்த்தி செய்திராதவருமான அலுவலரொருவருக்கு அவர் குறைந்தபட்சம் பதினைந்து (15) ஆண்டுகளைக் கொண்ட கணிதகு சேவையைப் பூர்த்தி செய்து திருப்திகரமாகச் சேவை ஆற்றியிருப்பின், கிரமமான வான்படையிலுள்ள அலுவலரொருவரின் விடயத்திற்போன்று ஓய்வூதியமொன்று வழங்கப்படலாம்.

(ஐ) வேறேதேனும் ஒழுங்குவிதியில் முரணாக எது எவ்வாறிருப்பினும் அரசாங்கத்தின் ஏதேனும் அமைச்சில், திணைக்களத்தில் அல்லது வேறேதேனும் நிறுவனத்தில் ஓய்வூதியம் பெறுதகு சேவையொன்றில் தொழிலுக்கமர்த்தப்பட்டிருக்கையில் 2009, மே 19 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் தொண்டர் படையின் அலுவலரொருவராகச் சொல்லப்பட்ட எவரேனுமாள் ஒன்றில் அரசாங்க சேவை தொடர்பில் அல்லது அத்தகைய தொண்டர் படைச் சேவையிலிருந்து முறையாக விடுவிக்கப்பட்டதன் மேல் அல்லது அத்தகைய தொண்டர் படைச் சேவையிலிருந்து முறையாக ஓய்வுபெறுவதன் மீது தொண்டர் படைச் சேவை தொடர்பில் ஓய்வூதியமொன்றுக்குத் தகவுடையவராக இராதிருக்குமிடத்து அவர் அத்தகைய தொண்டர் படையில் குறைந்த பட்சம் பத்து (10) ஆண்டுகளைக் கொண்ட கணிதகு சேவையைப் பூர்த்திசெய்து திருப்திகரமாகச் சேவை ஆற்றியிருப்பின், மற்றும் அரசாங்கத்திலும் அத்தகைய தொண்டர் படையிலும் அவரது சேவையைக் கவனத்துக்கெடுக்கும்போது இருபது (20) ஆண்டுகளுக்குக் குறையாத கூட்டுமொத்தச் சேவையை அவர் கொண்டிருப்பின் 4 ஆம் ஒழுங்குவிதியில் ஏற்பாடு செய்யப்பட்ட முறையிலும் கணக்கிடப்பட்ட ஓய்வூதியமொன்று அவருக்கு வழங்கப்படலாம்.

(ஒ) வேறேதேனும் ஒழுங்குவிதியில் முரணாக எது எவ்வாறிருப்பினும், 2009, மே 19 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் வான் படை வீரரொருவராகத் தொண்டர் படைக்கு ஆட்சேர்க்கப்பட்டிருந்தவரும் அவ்வாறு ஆட்சேர்க்கப்பட்ட நேரத்தில் 33 வயதுக்கு மேற்பட்டவராக இருந்தவரும் கட்டாய ஓய்வுபெறும் வயதை அடைந்ததன்மேல் அல்லது அவருக்குத் தொடர்ந்தும் தொழில் கிடைக்கக்கூடியதாக இருக்கின்றதில்லை என்ற முடிபொன்றின் விளைவாக அல்லது ஒதுக்குப் படைக்கு இடமாற்றப்படுகின்றமை காரணமாக அவர் ஓய்வுபெற்ற நேரத்தில் இருபத்திரெண்டு (22) ஆண்டுகளைக் கொண்ட கணிதகு சேவையைப் பூர்த்திசெய்திராதவருமான எவரேனும் ஆளுக்கு, அவர் குறைந்தபட்சம் பதினைந்து (15) ஆண்டுகளைக் கொண்ட கணிதகு சேவையைப் பூர்த்தி செய்து திருப்திகரமாகச் சேவை ஆற்றியிருப்பின், கிரமமான வான்படையிலுள்ள வீரரொருவரின் விடயத்திற்போன்று ஓய்வூதியமொன்று வழங்கப்படலாம்.

(ஓ) வேறேதேனும் ஒழுங்குவிதியில் முரணாக எது எவ்வாறிருப்பினும், அரசாங்கத்தின் ஏதேனும் அமைச்சில், திணைக்களத்தில் அல்லது வேறேதேனும் நிறுவனத்தில் ஓய்வூதியம் பெறுதகு சேவையொன்றில் தொழிலுக்கமர்த்தப்பட்டிருக்கையில் 2009, மே 19 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் வான்படை வீரரொருவராகத் தொண்டர் படையில் ஆட்சேர்க்கப்பட்ட எவரேனுமாள், ஒன்றில் அரசாங்க சேவை தொடர்பில் அல்லது அத்தகைய தொண்டர் படைச் சேவையிலிருந்து முறையாக விடுவிக்கப்பட்டதன் மேல் அல்லது அத்தகைய தொண்டர் படைச் சேவையிலிருந்து முறையாக ஓய்வுபெறுவதன் மீது தொண்டர் படைச் சேவை தொடர்பில் ஓய்வூதியமொன்றுக்குத் தகவுடையவராக இராதிருக்குமிடத்து அவர் தொண்டர் படையில் குறைந்த பட்சம் பன்னிரண்டு (12) ஆண்டுகளைக் கொண்ட கணிதகு சேவையைப் பூர்த்திசெய்து திருப்திகரமாகச் சேவை ஆற்றியிருப்பின், மற்றும் அரசாங்கத்திலும் அத்தகைய தொண்டர் படையிலும் அவரது சேவையைக் கவனத்துக்கெடுக்கும்போது இருபத்தியிரண்டு (22) ஆண்டுகளுக்குக் குறையாத கூட்டுமொத்தச் சேவையை அவர் கொண்டிருப்பின் 18 ஆம் ஒழுங்குவிதியில் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் கணக்கிடப்பட்ட ஓய்வூதியமொன்று அவருக்கு வழங்கப்படலாம்.".

12-26

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.